**செய்திவெளியீடு எண்.22/2017** **நாள்: 07.04.2017**

## சென்னை மாநகரின் நிலத்தடி நீர் மட்ட விவரம்

சென்னைக் குடிநீர் வாரியம், சென்னை நகரின் நிலத்தடி நீர் மட்டத்தையும், அதன் உப்புத் தன்மையையும் மாதந்தோறும் சென்னையின் பரப்பளவான 426 சதுர கிலோ மீட்டரில், 145 கண்காணிப்பு கிணறுகள் மூலம் ஆய்வு செய்து வருகிறது. சென்னை மாநகரில் மூன்று விதமான மண் வகைகள் உள்ளன. அதாவது மணல் சார்ந்த பகுதி, களிமண் சார்ந்த பகுதி மற்றும் பாறை சார்ந்த பகுதிகளாகும். இந்த மூன்று விதமான மண் பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்வு மற்றும் நீர் ஊடுருவும் தன்மை வேறுபடும்.

சென்னை நகரில் மார்ச் 2016 மற்றும் மார்ச் 2017 மாதங்களில் உள்ள நீர்மட்ட அளவுகளின் ஒப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| பகுதி | நிலத்தடி நீர் மட்ட அளவு மார்ச் 2016 | நிலத்தடி நீர் மட்ட அளவு மார்ச் 2017 | நீர்மட்ட சரிவு மீட்டரில் |
|---|---|---|---|
| 1 – திருவொற்றியூர் | 2.97 | 3.83 | (-) 0.86 |
| 2 – மணலி | 1.96 | 3.05 | (-) 1.09 |
| 3 – மாதவரம் | 2.08 | 3.73 | (-) 1.65 |
| 4 – தண்டையார்பேட்டை | 2.62 | 4.48 | (-) 1.86 |
| 5 – இராயபுரம் | 3.28 | 5.47 | (-) 2.19 |
| 6 – திரு.வி.க.நகர் | 2.00 | 4.88 | (-) 2.88 |
| 7 – அம்பத்தூர் | 2.99 | 5.34 | (-) 2.35 |
| 8 – அண்ணாநகர் | 3.23 | 4.81 | (-) 1.58 |
| 9 – தேனாம்பேட்டை | 3.31 | 4.74 | (-) 1.43 |
| 10 – கோடம்பாக்கம் | 2.96 | 4.32 | (-) 1.36 |
| 11 – வளசரவாக்கம் | 3.42 | 4.54 | (-) 1.12 |
| 12 – ஆலந்தூர் | 2.38 | 4.18 | (-) 1.80 |
| 13 – அடையார் | 2.93 | 4.40 | (-) 1.47 |
| 14 – பெருங்குடி | 2.42 | 3.38 | (-) 0.96 |
| 15 – சோழிங்கநல்லூர் | 1.92 | 2.62 | (-) 0.70 |




மேற்கூறிய மார்ச் 2016 மற்றும் மார்ச் 2017 மாதங்களில் உள்ள நீர்மட்ட அளவுகளை ஒப்பிடும்பொழுது சென்னை மாநகரிலுள்ள 15 பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் 0.70 மீ. (சோளிங்கநல்லூர்) முதல் 2.88 மீ. (திரு.வி.க. நகர்) வரை குறைந்துள்ளது. இத்தகைய குறைந்த மழைபொழிவின் காரணமாக சென்னைக் குடிநீர் வாரியம் சென்னை மாநகர பொதுமக்களிடம் கீழ்கண்ட முறையில் நீரினை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்துகிறது.

- குடிநீர் வாரியத்தால் சுத்திகரித்து வழங்கப்படும் குடிநீரை குடிப்பதற்கு மற்றும் சமைப்பதற்கும் மட்டுமே பயன்படுத்தவும்.
- குடிநீரை குடிப்பதற்கு மற்றும் சமைப்பதற்கு மட்டும் உபயோகித்து இதர தேவைகளுக்கு நிலத்தடி நீரை பயன்படுத்தவும்.
- குழாய் அமைப்பில் ஏற்படும் நீர் கசிவை உடனடியாக சரி செய்யவும்.
- பயன்பாட்டில் இல்லாதபோது குழாயை மூடிவைக்கவும்.
- முகச்சவரம் செய்யும்போதும், பல்துலக்கும் போதும் தண்ணீர் குழாயை மூடி வைக்கவும்.
- சமையலறை மற்றும் குளியலறையிலிருந்து வெளியேறும் நீரை தோட்டம்/செடிகளுக்கு பாய்ச்சி பயன்படுத்தவும்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்